1972 ஏப்ரல் 3]

[திரு. ப. உ. சண்முகம்]

பல்வேறு சட்ட விதித் துறைகளின்கீழ் செலுத்தத்தக்க வரித் தொகை அல்லது செலுத்தத்தக்க ஏனைய தொகை, திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவைகுறித்து ரூபாயின் பின்னங்களில் கொடுக்கல் வாங்கல் ஏற்படுகையில் நடைமுறை எளிதாவதற்காக, அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக அத்தொகையை மாற்றச் சட்ட பூர்வமான விதித்துறை செய்யப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துரைக்கிணங்க 7-ஏ என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம், தமிழ்நாடு 1935-ம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

இச்சட்டமுன் வடிவை நிறைவேற்றித் தருமாறு மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and caried.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதைச் சட்டமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு, எண் 3/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, " தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1972) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் " என முன்மொழிகிறேன்.

---

* 17-3-1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்]

பல்வேறு சட்ட விதித் துறைகளின்கீழ் செலுத்தத்தக்க வரி தொகை அல்லது செலுத்தத்தக்க ஏனைய தொகை, திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவைகுறித்து ரூபாயின் பின்னங்களில் கொடுக்கல் வாங்கல், ஏற்படுகையில் நடைமுறை எளிதாவதற்காக, அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக அத்தொகையை மாற்ற சட்ட பூர்வமான விதித்துறை செய்யப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துரைக்கிணங்க 7-பி என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம், தமிழ்நாடு, 1939-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதை சட்டமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1972). ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

---

* 23—3—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.